**தேசிய இளைஞர் படையணி - 2018**

இளைஞர் படையணியின் 2018 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடாபான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில்லாத காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமா்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் அண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கப்படுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமா்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நியதிச்சட்ட சபைகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளா் தலைமை அதிபதிக்குச் சமா்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3 நிதிக்கூற்றுக்கள்**

**1.3.1 படையணியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைத்திருதன்மை**

படையணியின் இறுதியாக தயாரிக்கப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்று தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**1.3.1.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | | 1,800,963,263 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | 650,296,889 |
| மொத்த சொத்துக்கள் | | 2,451,260,152 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 2,090,656,400 | |
| நடைமுறைச் பொறுப்புக்கள் | 98,766,550 | |
| மொத்த பொறுப்புக்கள் | | (2,189,422,950) |
| தேறிய சொத்துக்கள் | | 261,837,202 |
| | | ========= |

### 1.3.1.2 நிதி செயலாற்றல் தொடர்பான கூற்று

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| திறைசேரி மானியங்கள் | | 871,546,598 |
| ஏனைய வருமானம் | | 124,490,228 |
| மொத்த வருமானம் | | 996,036,826 |
| செயற்பாட்டு செலவினம் | 705,847,321 | |
| இளைஞர் அபிவிருத்தி செலவினம் | 358,659,502 | |
| மொத்த செலவினம் | | **(1,064,506,823)** |
| பற்றாக்குறை | | **(68,469,997)** |

### 1.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.4.1 பெறவேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களுக்காக வெளி நிறுவனத்திலிருந்து மீளாய்வாண்டிற்காக ரூபா 2,234,504 தொகையும் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 6,580,871 தொகையுமாக மொத்தம் ரூபா 8,815,375 தொகை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அந்த ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய பெறுமதி தொடர்பாக அந் நிறுவனத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உரிய சதவீதத்தை குறித்த நிறுவனத்திடம் இருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.4.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது படையணி பயிற்சியளித்தல் நிலையக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு உரிய நடவடிக்கைகளில் பொறியியல் சேவைகள் வழங்குவதற்கான கட்டிட திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 100,653,154 தொகை திருத்த செய்யப்படாதிருந்ததுடன் அப் பொறுப்புக்கள் கணக்குகளில் குறிப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது குறித்த சீராக்கங் களை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொறுப்புக்கள் சரியாக இணங்காணப்பட்டு கணக்குகளில் குறிப்பிடுவதற்கும் உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி அப் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2002 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணி அதிகாரச் சட்டம் | | | |
| | (i) 2(4) ஆம் பிரிவு | இளைஞர் படையணி சபையின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக தேவைப் படக்கூடிய வேண்டிய தொழில்சார் பயிற்சிகள், இளைஞர் அபிவிருத்தி மற்றும் ஸ்தாபித்தல் போன்ற பணிகளுக்காக மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் விடயப்பரப்பு அவ்வப்போது வேறுபட்டதால் நிர்வாகத்திற்கான குழு செயற்படாதிருந்ததாக | நிர்வாகத்திற்கான குழுவினை செயற்படுத்து வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 19 ஆம் பிரிவு | சேர்க்கப்பட வேண்டிய பயிலுனர்களின் வயது பதினெட்டு வருடங்களுக்கு குறையாமலும், இருபத்தெட்டு வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டிய போதிலும், பதினெட்டு வயதிற்குக் குறைந்தவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | சட்டத்தை திருத்தம் செய்து சேர்க்கப்பட வேண்டிய வயதை 16 வயது வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தை திருத்தம் செய்யப்படாமையால் காணப்படும் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1982 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை திருத்த சட்டத்தின் 8 ஆம் பிரிவு | உரிய உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் நிலையத்தின் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | காணி முறைப்படி கையேற்கப்படும் வரை பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் மேற்கொள்வதாகவும் | உரிய உள்ளுராட்சி மன்றத்திடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக | ஒவ்வொரு கொடுப்பனவும், | படையணியினால் தொழிற் பயிற்சி | நிதிப் பிரமாணத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை – நிதிப்பிரமாணம் 264(1) | உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட குறித்த தொகையை பெற்றுக் கொண்தாக பெறுவோனிடமிருந்து பெற்றுக்கொண்ட தேவையான பிரகாரம் முத்திரை ஒட்டி பற்றுச்சீட்டொன்று மூலம் உறுதிப்படுத்த வேண்டும். எனினும், தொழில் பயிற்சிக்குரியதாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு அவ்வாறான பற்றுச்சீட்டு கொடுப்பனவு உறுதிச் சீட்டுடன் சமர்ப்பிக்கப் படவில்லை. இதன் பிரகாரம் குறித்த நபருக்கு / நிறுவனத்திற்கு பணம் கிடைத்ததா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று காணப்படவில்லை. | நிறுவனங்களிற்கு கோடிடப்பட்ட காசோலைகள் வழங்கப்படுவதாகவும் படையணி பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங் களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது இச்செயற்பாட்டை மேற்கொள்வது நடைமுறை ரீதியில் சிக்கல் உள்ளதாகவும் எனினும், எதிர்காலத்தில் இந் நடைமுறையை பின்பற்று வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும் | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆந் திகதி பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பந்தி | ஒப்பந்த வேலைகளுக்காக மதிப்பிடப்பட்ட ஒப்பநத் வேலை பெறுமதியில் 5 சதவீதத்திற்கு குறைந்த செயலாற்றல் பிணை முறியொன்றை ஒப்பந்த காரரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய போதும் NEMO நிறுவனததிற்கு வழங்கிய ஒப்பந்தத்திற்காக செயலாற்றல் பிணை முறியொன்றை ஒப்பந்த காரரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில் லை. | 2008 சனவரி 11 ஆந் திகதிய 8/0173/344/002 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச நிர்மாண கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரச பொறியியலாளர் கூட்டுத்தாப னத்தினால் நிறைவேற்றப்படும் நிர்மாண வேலைகளுக்காக செயலாற்றல் மற்றும் பிணைப் பொறுப்பினை பெற்றுக் கொள்ளும் தேவைப்பாட்டி இருந்து விடுவிக்கப்பட்டிருந்த மையால் NEMO நிறுவனத்திடமிருந்து பிணைப் பொறுப்பு பெற்றுக் கொள்ளப்பட | அந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உப ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படு ம் செயற்பாடுகளுக் காக இச் சலுகை உரித்தாவது இல்லை என்பதால் NEMO நிறுவனம் உப ஒப்பந்தம் வழங்கிய ஒப்பந்தக்காரரிடமி ருந்து செயலாற்றல் பிணை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வில்லையென | |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | | |
| | (i) | 6.5.3 ஆம் பிரிவு | ஆண்டறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் படையணியால் 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டறிக்கை சபையில் சமர்ப்பித்திருக்கவிலலை யென | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) | 8.3.9 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனம் ஒன்றில் உள்ள வளங்களை வரிசை அமைச்சிற்கு அல்லது வேறொரு அரச நிறுவன மொன்றுக்கு வழங்குவதற்கு அனுமதி இல்லாத போதும் அதற்கு முரணாக மீளாய்வாண்டில் படையணியின் பதவியணியில் 03 பேர் வேறு அரச நிறுவனங் களுக்கு விடுவிக்கப்பட்டி ருந்ததுடன், அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 505,669 தொகை படையணியால் செலவிடப்பட்டிருந்தது. | அமைச்சின் பரிந்துரையுடன் படையணியின் பதவி யணியில் 03 பேர் வேறு அரச நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டிருந்ததா க | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 12 புதிய நிலையங்களை ஆரம்பித்தல் அத்தியாவசிய மற்றும் அவசர செயற்பாடொன்றான கருதி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அந் நிலையங்கள் ஆரம்பிக்கப்படா மையால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சிய வாடகை, பாதுகாப்பு சேவைகள் கட்டணங்கள் சம்பளம் மற்றும் கிருமிகளை ஒழித்தல் கட்டணங்களாக 2019 மே மாதம் வரை ரூபா 5,147,125 செலவிடப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டின் இறுதி பகுதியில் பயிற்சி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டு அப்போது இருந்த பணிப்பாளரின் ஆலோசனையின் பேரில் அந் நிலையங்களுக்காக தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பரீட்சாத்த செயற்திட்டத்தின் கீழ் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு கையளித்த தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தின் நிர்மாண வேலைகள் தாமதமடைந்தால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை எதிர்காலத்தில் பயன்படுத்தக் கூடிய வகையில் பாதுகாப்பாக வைப்பதற்கு ரூபா 5,147,125/- செலவிட நேர்ந்ததாகவும். | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிலையங்களின் நிர்மாண செயற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உரிய நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் மாத்திரம் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

### 2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 2.2.1 | இளைஞர் படையணி நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்ட காணிகள் | | |
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு படையணியால் 49 பிரதேச பயிற்சி நிலைங்கள் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் அந்நிலையங்களுக்குரிய காணியின் அளவு 116.8769 ஹெக்டேர்களாகும். அரச திணைக்களங்களுக்கு காணி வழங்குதல் தொடர்பாக | படையணி ஆரம்பத்தின் போது பிரதேச செயலாளர்கள் (அரசு) மற்றும் அரச நிறுவனங்களின் பொறுப்பில் இருந்த வெற்றுக் காணி உட்பட கட்டிடங்களுடன் கூடிய காணியை பெற்றுக் கொண்டு பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்ட | காணிகளை முறையாக கையேற்கவும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்றுப்பத்திரம் மூலம் 06 நிலையங்களுக்குரிய 10.8859 ஹெக்டேயர் காணி படையணிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்ட போதும் அக்காணி மற்றும் கட்டிடங்கள் முறையாக கையேற்றல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லையெனவும் தற்போது காணியை முறையாக கையேற்க நடவடிக்கை எடுத்து வருவதுடன் 2018 திசெம்பர் 31 வரை 06 பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களை முறையாக கையேற்க கூடியதாக இருந்ததுடன் அக் காணி அரச திணைக் களங்களுக்கு காணி கையளிக்கும் சான்றிதழ் மூலம் படையணி உரித்தான அமைச்சிற்கே கையளிக்கப்படுவ தால் அப் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என | |
| (ஆ) | 35 நிலையங்களுக்குரிய காணியை கையேற்றல் செயற்பாடுகள் மிக மெதுவாக செயற்படுத்தப்பட்டு வந்தன. | அடிக்கடி இடம் பெறும் அமைச்சு மாற்றம் போன்ற காரணங்களினால் கையேற்றல் செயற்பாடுகள் தாமதமாக இடம் பெறுவதாக | கையேற்றல் செயற்பாடுகள் செயற்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | ஏனைய நிறுவனங்களுக்குரிய காணிகளில் அமைந்துள்ள கட்டிடங்களில் 08 நிலையங்கள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன. | ஏனைய நிறுவனங்களுக்குரிய காணிகளில் திவுலுப்பிட்டிய, ஹங்குரன்கெத, சூரியவெவ கிண்ணியா, கெகிராவ, மூதூர் தெஹியத்தகண்டி மற்றும் அம்பாறை ஆகிய நிலையங்கள் நடாத்திச் செல்லப்படுகின்ற அந் நிலையங்களின் அமைந்துள்ள காணிகளின் சட்ட ரீதியான உரித்து படையணிக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் | கையேற்றல் செயற்பாடுகள் செயற்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | எனினும், இந் நிலையங்களுக்காக மீளாய்வாண்டின் போது கட்டிடங்கள் மற்றும் மேம்படுத்தல்களாக ரூபா 128,934,770 செலவிடப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | அந் நிலையங்களின் அமைந்துள்ள காணிகளின் சட்ட ரீதியான உரித்து படையணிக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் நிலையங்களிற்காக கட்டிடங்கள் மேம்படுத்தல் | கையேற்றல் செயற்பாடுகள் செயற்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

பூர்த்தி செய்யப்படாத மூலதன வேலைகளாக ரூபா 1,694,222,933 தொகை செலவிடப்பட்டிருந்தன. மேற் கொள்ளப்பட்டதாகவும்

**2.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

**2.3.1 பயிலுனர்களை சேர்த்துக்கொளள்ளலும் பயிற்சியளித்தலும்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டின் போது படையணியால் பாடநெறி களை நடாத்துவதற்கு முதலாவது குழு 2017 சனவரி முதல் யூன் வரையும் இரண்டாவது குழு 2017 செப்தம்பர் முதல் 2018 பெப்ரவரி வரையும் நடாத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் முதலாவது அரையாண்டில் பாடநெறிகள் நடாத்தப்படாமல் இருந்ததுடன் ஒரு குழுவின் காலம் 03 மாதங்கள் வரை குறைத்து 2018 யூன் முதல் ஆகஸ்ட் வரையும், ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையுமாக பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன. பாடநெறிக் காலம் கடந்த ஆண்டினுள் இரண்டு சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதும் மறையான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. | 2017 சனவரி முதல் 2018 பெப்ரவரி வரை 2017 ஆம் ஆண்டிற்குரிய 02 குழுக்களுக்காக பயிற்சி பாடநெறிகள் நடாத்தப் பட்டதால் 06 மாத பாடநெறிகள் 02 இனை 2018 ஆம் ஆண்டில் நடாத்துவதில் சிரமங்கள் காணப்பட்டதால் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் குறுகிய காலத்தில் பயிலுனர்கள் / பெண் பயிலுனர்கள் தொழிற் பயிற்சிக்கு தொடர்பு படுத்ததுல் தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு அப்போது இருந்த பணிப்பாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இரண்டு 03 மாதப் பாடநெறிகளை நடாத்து வதற்கு திட்டமிடப்பட்டன. இதற்காக பிரதம மந்திரியின் சிரேஷ்ட ஆலோசகர் ஒருவரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரை யாடலின் போது பாடநெறி காலப்பகுதியை குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. எனினும் ஏப்ரல் மாதம் 05 ஆந் திகதியின் பின்னர் 2018 இன் முதலாவது பாட நெறி ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரை தேசிய இளைஞர் படையணி | முறையான மதிப்பீடு மற்றும் முறையான அங்கீகாரத்தின் பின்னர் திருத்தம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடாத்தப்படாமையால் அதற்காக சபை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தாகவும். | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக 49 நிலையங்களுக்காக இரண்டு குழுக்களுக்கு 7,271 பயிலுனர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அதில் 1,883 பேர் அதாவது சேர்க்கப்பட்ட பயிலுர்களில் 26 சதவீதம் பாடநெறிகளை விட்டுச்சென்றிருந்ததுடன் பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை 5,388 ஆக இருந்தனர். | மீளாய்வாண்டிற்காக 49 நிலையங்களுக்காக 2019 முதலாவது தொகுதிக்கு 3750 பேரும் இரண்டாவது தொகுதிக்கு 3750 பேரும் என இரண்டு தொகுதி களுக்கும் 7500 பயிலுனர்கள் சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் 2 குழுக்களுக்கும் 7271 பயிலுனர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அது எதிர்பார்க்கப்பட்ட அளவில் 97 சதவீதம் எனவும் அவ்வாறே பாட நெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை 5388 எனவும் அதன் பிரகாரம் பாட நெறிகளின் வெற்றி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 4.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும். | படையணி கொள்வனவு மேற்கொள்ளும் போது நிலையம் ஒன்றிற்கு 200 மாணவர்கள் அடிப்படையிலும் மாணவர் ஆட்சேர்ப்பின் போது 75 மாணவர்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமை ஏற்றுக் கொள்ள முடியாமையால் திட்டமிடல் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பயிலுனர்களை பாடநெறியை விட்டுச் செல்லல் குறைவான மட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது முதலாவது குழுவிற்காக போதியளவு மாணவர் எண்ணிக்கையொன்று பதிவு செய்யப்படாமை யால் கந்தளாய் நிலையத்திற்காக முதலாவது குழு சேர்த்துக் கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | கந்தளாய் நிலையத்தினால் முதலாவது குழுவிற்காக போதியளவு மாணவர் எண்ணிக்கையொன்று பதிவு செய்யப்படாமை யால் பாடநெறிகளை ஆரம்பிக்காமல் இருப்பதற்கு அப்போதிருந்த பணிப்பாளரால் தீர்மானிக்கப்பட்டது. | போதியளவு மாணவர்கள் பதிவு செய்யாமைக்கான காரணங்களை இணங்கண்டு அதற்கான தீர்வினை காணுதல் வேண்டும். |
| (ஈ) | ஒரு வகுப்பிற்கு 50 மாணவர்கள் வீதம் 4 வகுப்புக்களுக்காக வசதிகள் நிலையங்களில் இருந்தன. 2018 முதலாவது குழுவிற்குரிய 12 நிலையங்களும் இரண்டாவது குழுவிற்குரியதாக 35 நிலையங்களில் மாணவர் எண்ணிக்கை 50 இற்கு குறைவாக இருந்தமையால் நிலையங்களில் வளங்கள் குறைப்பயன்பாட்டிற்கு | பொதுவாக முதலாவது பாடநெறி சனவரி மாதத்தில் ஆரம்பமாவதுடன் அதற்கு அதிகளவு மாணவர்கள் சமூகமளிப்பதனை காணக்கூடியதாக இருப்பதால் 50 பேருடன் கூடிய வகுப்பொன்றை நடாத்துதல் நடைமுறையில் எதிர்பார்க்க கூடியதாக இருந்த போதும் இரண்டாவது பாட | நிலையத்திற்காக கிரயத்தை கணக்கிடும் நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு நிலையத்திற்கு சொந்தமான வளங்களில் கூடிய பயன்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| உட்பட்டதாக அவதானிக்கப்பட்டது. மேலும், ஒவ்வொரு நிலையத்திற்கான கிரயம் கணக்கிடும் நடை முறையொன்று இல்லாமை யால் இந் நிலையங்களில் பயிலுனர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமைக்கு ஒப்பாக கிரயத்தில் குறைவொன்று இடம் பெற்றுள்ளதா என்பதை பரீட்சிக்க முடியாமல் இருந்தது. | நெறிக்காக சமூகமளித்தல் குறைவாக இருப்பதால் ஒரு வகுப்பிற்கு 50 பேர் எதிர்பார்க்க முடியாதுள்ளதாகவும் 2018 ஆம் ஆண்டின் முதலாவது பாடநெறி யூன் மாதத்தில் ஆரம்பித்தமையால் மேற்குறிப்பிட்ட வகையில் அதிகளவு மாணவர் பங்குபற்றுதலை எதிர்பாக்க முடியாதுள்ளதாகவும் | |

## 2.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி பணிப்பாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு வழங்கிய பீடீ/என்வைசீ/சீ.ஆர்/ 2018 மற்றும் 2018 யூன் 22 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் ஒரு நாளைக்கு ரூபா 325 மற்றும் ரூபா 6,500 உயர்ந்த பெறுமதிக்கு உட்பட நாளாந்த செலவின படியொன்று கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும். மேலதிக பணிப்பாளர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி 2018 யூலை 02 ஆந் திகதிய என்வைசி/03/1/8 ஆம் இலக்க கடிதத்தின் திகதி முதல் ஒரு நாளைக்கு உணவுச் செலவினம் ரூபா 225 என குறிப்பிட்டிருந்தது. அவ்வாறே பயிற்சி படி ரூபா 125 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | சட்ட பிரிவினால் பேணிச் செல்லப்படும் உடன் படிக்கை பிரதிகளுடன் கூடிய கோவை காணாமல் போயிருந்ததுடன் செயற்பாட்டு பிரிவு கோவை 2019 செப்தெம்பர் 05 ஆந் திகதி இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய புலனாய்வு ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | பொறுப்பான உதியோகத்தர்களின் கீழ் கோவைகள் பேணிச்செல்ல வேண்டியதுடன் அவை காணாமல் போனமைக்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட வேண்டும். |
| (அ) நாளாந்த படிகள், உணவு படிகள் மற்றும் பயிற்சி படிகளை இரண்டு பகுதிகளாக பகிர்ந்தளிப்பதற்கான அங்கீகாரம் கணக்காய்விற்கு | 2018.06.29 ஆந் திகதிய படையணி பணிப்பாளரால் அமைச்சின் செயலாளருக்கு தொடர்புபடுத்தப்பட்ட கடிதத்தின் மூலம் படிகளை அதிகரிக்குமாறு கோரப்பட்டுள்ளது. இதற்காக | நாளாந்த செலவினப் படிகள், உணவு மற்றும் பயிலுனர் படியாக இரண்டு பகுதிகளாக வழங்குவதை முறையான அங்கீகாரத்தின் பேரில் |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் வரை சபையின் அங்கீரத்தின் பேரில் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் பயிலுனர்களுக்கு நாளாந்தம் கூடியது ரூபா 200 இற்கு உட்பட்டு உணவினை வழங்குவதற்காகவும் ரூபா 125 படியொன்று வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் | மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மேற்குறித்த மேலதிக பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் உணவிற்காக ரூபா 225 தொகையும் நாளாந்த படி ரூபா 125 ஆக இருக்கையில் அது ரூபா 350 ஆக இருப்பதால் ஒரு நாளைக்கு அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூபா 25 ஆல் அதிகரித்திருந்தது. | திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும் வரை சபையின் அங்கீகாரத்தில் பேரில் ரூபா 25.00 மேலதிக தொகையொன்று உணவுப் படியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப் படிகள் கொடுப்பனவிற்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்காமையால் பயிலுனர்களுக்கு செலுத்தப்பட்ட படிகளில் அவர்களின் விருப்பத்தின் பேரில் குறித்த பணத்தை அறவிட்டு வழங்குனருக்கு கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் | திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 2.5 நிதியத்தின் குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 17.6 மில்லியன் பயன்படுத்தப்படாத நிதியம் அவதானிக்கப்பட்டதுடன் சீன அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் 03 சீனமொழி கல்லூரிகள் ரூபா 13 மில்லியன் 2016 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 4.6 மில்லியனைக் கொண்டிருந்தது. | காலி நிலையத்தின் வகுப்புக்கள் தயார்படுத்தப் பட்டதன் பின்னர் வென்னப்புவ நிலையத்தின் செலவின மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக கட்டிட திணைக்களத்திற்கு வழங்குவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதுடன் யக்கல நிலையம் நிர்மாணத்திற்காக மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளதாகவும் | நிதியத்தை விளைவற்ற வகையில் வைக்காமல் குறித்த செயற்பாட்டிற்கு செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பரீட்சார்த்த செயற்திட்டத்தின் கீழ் 2017 திசெம்பர் 30 ஆந் திகதி ஒலிபெருக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்ததற்காக படையணியால் செலவிடப்பட்ட ரூபா 2,072,139 தொகை அந்த ஒலிபெருக்கி இயந்திரங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் அப்பணத்தை 2018 ஒக்தோபர் 11 ஆந் திகதி படையணிக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் படையணியை அந்த இயந்திரங்களின் உரிய தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாமல் அத்தொகையை அமைச்சிற்கு 2018 திசெம்பர் 27 ஆந் திகதி திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது | புதிய பயிற்சி நிலையங் களுக்கான தேவைப்ப ாட்டிற்காக 12 ஒலிபெருக்கி தொகுதிகளை பெற்றுக் கொள்வதற்கு வ/ப இலங்கை அரச வர்த்தக (பலநோக்கு) கூட்டுத்தாபனத்திற்கு மேற்கொண்ட கட்டளையின் பிரகாரம் 12 ஒலிபெருக்கிகள் படையணிக்கு வழங்கப்பட்டிருந்தன. பொருட்களை வழங்கும் போது மோசடியாக செயற்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட காரணத்தினால் அப் பொருட்களின் பெறுமதி மீண்டும் படையணிக்கு வழங்கப்பட்டதாகவும், பெறுகை செயற்பாட்டிற்கு போதியளவு காலமொன்று இல்லாமை காரணமாக ஆண்டின் இறுதியில் அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக | பொருட்களின் உள்ளவாறான தேவைப்பாடு இணங்காணப்பட வேண்டியதுடன் அதன் பிரகாரம் பெறுகை செயற்பாட்டினை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |

## 2.6 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 650,000 வீதம் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுப்பெறுமதி 18 முச்சக்கர வண்டிகள், கணக்காய்வு திகதியான 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் 2019 திசெம்பர் 02 ஆந் திகதிய 3 முச்சக்கர வண்டிகள் படையணியுடன் தொடர்புறாத | 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு உத்தேசிக் கப்பட்டிருந்த நிலையங் களுக்கு வழங்குவதற்கு 2017 திசம்பர் 31 ஆந் திகதி 18 முச்சக்கர வண்டிகள் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதும் நிலையங்களின் நிர்மாண செயற்பாடுகள் தாமதமான மையால் அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட 18 முச்சக்கர வண்டிகளில் 13 தற்போது | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனமொன்றான சிறு வியாபார, அபிவிருத்தி பிரிவிற்கு கையளிக்கப்படடிருந்தன. | பயிற்சி நிலையங்களுக்கும் அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் எஞ்சிய முச்சக்கர வண்டிகளில் 03 சிறு வர்த்தக அபிவிருத்தி பிரிவிற்கும் எஞ்சிய முச்சக்கர வண்டிகள் படையணியின் தலைமையகத்தின் வாகன குழாம் கடமைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் | |

**2.7 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைத்திட்டங்களின் தாமதம்**

**2.7.1 நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிர்மாணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உத்தேச மீகஹகியுல மற்றும் பெல்மதுளை இளைஞர் படையணி நிலையங்களை நிர்மாணிப்பதற்காக முற்பணமாக முறையே ரூபா 19,662,001 மற்றும் ரூபா 17,018,461 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் காணி உரித்து தொடர்பான சிக்கல்கள் அடிப்படையில் அந் நிர்மாணங்கள் இரத்துச் செய்யப்பட்ட போதும் முற்பணம் இதுவரை அறவிடப் பட்டிருக்கவில்லை. | காணிப்பிரச்சினை தொடர்பாக ஏற்பட்ட சிக்கலினால் இரத்துச் செய்யப் பட்டதாகவும் முற்பணத்தை ஒப்பந்தக்காரரால் நிர்மாணிக்கப்படும் ஏனைய நிலையங்களின் நிர்மாண பட்டியல்களின் மூலம் தீர்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டு அது தொடர்பாக உரிய ஒப்பந்தகாரருக்கு தெரியப்படுத்துவதாகவும் ஒப்பந்தத்திற்காக செலுத்தப்பட்ட முற்பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் | ஒப்பந்தத்திற்காக செலுத்திய முற்பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | ரூபா 179,058,171 பொறியியலாளர் மதிப்பீட்டிலான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்த தனியார் நிறுவனம் சிலாபம், கற்பிட்டி நிலையங்களின் 02 நிர்மாண ஒப்பந்தங்களின் பௌதீக முன்னேற்றம் 40 மற்றும் நிதி முன்னேற்றம் 28 சதவீதமாக இருக்கையில் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. அந் நிறுவனத்திற்கு வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 37,302,688 வழங்கப்பட்டிருந்த | பெறுகை செயற்பாட்டின் பிரகாரம் அந்த தனியார் நிறுவனத்திற்கு வழங்கிய கற்பிட்டி மற்றும் சிலாபம் நிலையங்களின் நிர்மாண வேலைகள் பௌதீக முன்னேற்றம் கருத்திற் கொள்ளப்பட்டு கட்டிட திணைக்களத்தின் பரிந்துரையின் பிரகாரம் அந் நிர்மாணம் இரத்துச் செய்யப்பட்டது. | ஒப்பந்தத்திற்காக செலுத்திய முற்பண தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துடன் செய்யப்பட்ட வேலைக்காக கொடுப்பனவு செய்யும் போது முற்பண பிணை பொறுப்பு தீர்வு செய்யப்பட்டதன் பின்னர் மேலும் மேற்குறித்த முற்பணத் தொகையில் ரூபா 4,238,300 அறவிட முடியாதுள்ளது. | | |
| (இ) | வெளிமட நிலையத்தின் நிர்மாண வேலைகள், காணியின் அமைவிடம் புவியியல் வேறுபாடு காரணமாக கட்டிடங்களின் நிர்மாணங்கள் உறுதியற்ற அனர்த்த நிலைமை உருவாகியதன் காரணமாக நிர்மாண நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதும் முற்பணமாக செலுத்திய ரூபா 19,259,020 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வெளிமட நிலையத்தின் நிர்மாணம் இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால் முற்பணத்தை பிணை முறியிலிருந்து தீர்ப்பதற்கு தெவையான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் | ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் ஒப்பந்தத்திற்காக செலுத்திய முற்பணத்தை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2.8 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2.8.1 | திக்வெல்ல, அம்பாந்தோட்டை, லுணுகங்வெஹெர, திஸ்ஸ மஹாராம மற்றும் சூரியவெவ இளைஞர் படையணி நிர்மாண செயற்திட்டம்<br><br>கௌரவ வீடமைப்பு நிர்மாண அமைச்சரால் 2016 யூலை 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 16/1501/736/034 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2016 ஆகஸ்ட் 07 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அங்கீகாரத்தின் பிரகாரம் இளைஞர் படையணியால் 2016/2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுடன் இளைஞர் படையணி நிலையங்களில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நிர்மாண செயற்திடடங்களுக்கு விலை கோராமல் தேசிய இயந்திர | | |

| | | | |
|---|---|---|---|
| | உபகரண நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | மேற்படி அமைச்சரவை விஞ்ஞானபத்தின் 4(ஆ) பந்தியின் கீழ் இனங்காணப்பட்டுள்ள வேலைகள் உட்பட எதிர்வரும் காலங்களில் இனங்காணப்படும் வேலைகள் தொடர்பாக ஆராய்ந்து அவ்வேலை பகுதிகளை கேள்வி கோராமல் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு கையளிப்பதற்கான பொருளாதார முகாமை தொடர்பான அமைச்சரவை குழுவின் பரிந்துரைக்காக உத்தியோகத்தர் குழுவொன்று நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த துடன் அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. எனினும் அவ்வாறான குழுவொன்று நியமிக்கப்பட்டமைக்காக அல்லது இளைஞர் படையணியால் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த ஒப்பந்தங்களுக்கான பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவிற்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்ட தாகவோ அல்லது முன்மொழிவிற்காக பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவின் அங்கீகாரம் பெற்றுக் | அமைச்சரவை குழுவிற்கு பரிந்துரைகள் வழங்குவதற்காக தேசிய இளைஞர் படையணி யினால் உத்தியோகத்தர் குழுவொன்று நியமிக்கப்படாமல் இருந்ததுடன் மேற்படி அமைச்சரவை தீர்மான கடிதத்தின் பிரகாரம் செயற்படுத்தியதாக. | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் முனமொழிவிற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளமையால் அம் முன் மொழிவினை அமுல்ப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | விஞ்ஞானத்தின் 4 (இ) பந்தியின் கீழ் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு நேரடி ஒப்பந்தங்களை கையளிப்பதற்குரியதாக காணப்படும் ரூபா 25 மில்லியன் எல்லையினை ரூபா 50 மில்லியன் வரை அதிகரிப்பதற்கு மேற்படி 4(ஆ) இன் கீழ் நியமிப்பதற்கு முன்மொழி யப்பட்ட உத்தியோகத்தர் குழுவின் பரிந்துரை பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் அவ்வாறான பரிந்துரை யொன்று சமர்ப்பிக்கப்பட்டதாக அல்லது அதற்காக பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்தமை தொடர்பாக சான்றகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இளைஞர் படையணி பணிப்பாளருக்கு 2016 செப்தெம்பர் 06 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்த எம்என்பீஈஏ/வைஏபீ/11/01/ Vo1 ii) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு நேரடி | அமைச்சரவை குழுவிற்கு பரிந்துரைகள் வழங்குவதற்காக தேசிய இளைஞர் படையணியினால் உத்தியோகத்தர் குழுவொன்று நியமிக்கப்படாமல் இருந்ததுடன் மேற்படி அமைச்சரவை தீர்மான கடிதத்தின் பிரகாரம் செயற்படுத்தியதாக. | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் முன்மொழிவிற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளமையால் அம் முன் மொழிவினை அமுல்ப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தத்தை கையளிக்கும் போது இளையோர் படையணி நிலையமொன்றில் மேற்கொள்ளப்படும் நிர்மாணம் ரூபா 25 மில்லியன் எல்லைக்கு உட்பட்டு மேற்கொள்வதற்கு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் தென் மாகாணத்தில் செயற்படுத்தப்பட்டிருந்த 5 இளைஞர் படையணி நிலையங்களுக்குரியதாக மொத்தம் ரூபா 362,474,376 ஆன நிர்மாணங்கள் நேரடியாக தேசிய இயந்திர நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. | | |
| (இ) | ஒப்பந்தங்கள் கையளிக்கப்படும் போது அதற்காக இளைஞர் படையணி சபையில் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொண்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உப ஒப்பந்தம் வழங்குவதற்கு இளைஞர் படையணியால் நடவடிக்கை எடுக்கப் படாதிருந்ததுடன் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தினால் அவ்வாறு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த செயற்திட்டங்கள் தொடர்பாக விபரங்களை பெற்றுக் கொள்வதற்கு கோரப்பட்ட போதும் இது வரை விபரங்கள் வழங்கப்படவில்லை என | குறித்த அங்கீகாரங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கௌரவ நிர்மாண மற்றும் பொறியியல் சேவை அமைச்சரினால் 2008 சனவரி 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 8/0173/344/002 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அங்கீகாரம் 2008 பெப்ரவரி 06 ஆந் திகதி கிடைத்திருந்தது. இந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச நிர்மாண கூட்டுத்தாபனத்தினால் காணப்படும் வளங்களுக்குள் நேரடியாக | உப ஒப்பந்தம் வழங்குவதற்கு இளைஞர் படையணியால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தினால் அவ்வாறு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த செயற்திட்டங்கள் தொடர்பாக விபரங்களை பெற்றுக் கொள்வதற்கு கோரப்பட்ட போதும் இது வரை விபரங்கள் வழங்கப்படவில்லை யென | அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்தப்படுகின்ற நிர்மாண செயற்திட்டங்களுக்குரிய செயலாற்றல் மற்றும் முற்பண பிணை பொறுப்பினை வழங்கும் தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும், உப ஒப்பந்தங்களின் கீழ் செயற்படுத்தப்படும் நிர்மாணங்களுக்கு இவ்விடுவிப்பு பொருந்தாதென குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அமைச்சரவை தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய இயந்திர நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து ஒப்பந்தங்களும் உப ஒப்பந்தங்களாக வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | மேற்படி அமைச்சரவை தீர்மானத்தை எடுக்கும் சந்தர்ப்பத்தில் தேசிய இயந்திர நிறுவனம், அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதியாக காணப்பட்ட போதும் கௌரவ வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சரால் 2016 சனவரி 13 ஆந் திகதி சமர்ப்பித்த 16/0082/736/002 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2016 சனவரி 27 ஆந் திகதி கிடைத்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தினை வேறான முகாமைத்துவ குழுவொன்றின் கீழ் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படும் வேறொரு செயற்திட்டமொன்றாக | மேற்படி அமைச்சரவை தீர்மானத்தின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் | ஏதேனும் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டால் உரிய உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டு சாதகமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தால் 2008 சனவரி 06 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தை உரித்தாக்குவதனை நிச்சயிக்க முடியாதிருந்தது. | | |
| (ஊ) | உடன்படிக்கை நிபந்தனையாக ஐசீடீஏபீ/எஸ்பீப/04 நிபந்தனை பொருந்துவதாக குறிப்பிடப்பட்டிருந்தது எஸ்பீடீ/04 இல் நிபந்தனை இல 4.4 இன் பிரகாரம் முழு செயற்பாட்டையும் உப ஒப்பந்தமாக வழங்க முடியாத போதும் ஒரு பகுதியாக உப ஒப்பந்தம் வழங்கும் போது பொறியியலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் எவ்வித அங்கீகாரமொன்று இல்லாமல் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட தென்மாகாணத்திற்குரிய நிர்மாண ஒப்பந்தங்கள் உப ஒப்பந்தமாக வழங்கப்பட்டிருந்தது. இங்கு படையணியால் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்ட பெறுமதியை விட 45 முதல் 35 சதவீதம் வரையான வீச்சில் இருந்து குறைந்த பெறுமதி அடிப்படையில் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. | மேற்படி அமைச்சரவை தீர்மானத்தின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கட்டதாகவும் | உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ஒப்பந்த உடன்படிக்கையின் தரவுப் பத்திரத்தின் உப பிரிவு 18.2 இன் பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்பிடும் காப்புறுதிகள் எதுவும் ஒப்பந்தக்காரரால் வழங்கியதாக சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. கட்டிட திணைக்களத்திற்கு அச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இக்காப்புறுதி சான்றிதழின் கீழ் வழங்க வேண்டிய ஆரம்ப உடன்படிக்கை பெறுமதியில் 10 சதவீத பெறுமதி அெதாழில் இழப்பு முழுமை காப்புறுதி சான்றிதழ் (professional Indemnity Insurance) எந்தவொரு கட்டிடத்திற்குரியதாக வழங்கப்படாதிருந்ததுடன் கொடுப்பனவு செய்யும் போது இக்காப்புறுதி சான்றிதழ் வழங்காமை தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்ல. | ஒப்பந்த உடன்படிக்கையின் தரவுப் பத்திரத்தின் உப பிரிவு 18.2 இன் பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்பிடும் காப்புறுதி சான்றிதழ் வழங்குவது தொடர்பாக கட்டிட திணைக்களத்தின் 06-04-33-2018 மற்றும் 2018.12.18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | தென் மாகாணத்தினுள் அமைந்துள்ள இளைஞர் படையணி நிலையங்கள் 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி பௌதீக பரீட்சிக்கப்பட்டதுடன் நிர்மாணத்தின் பல வீனங்கள் பல அங்கு அவதானிக்கப்பட்டன. | NEMO நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணம் தொடர்பாக அடுத்த ஆலோசனை கேட்டு அமைச்சின் செயலாளரிடம் கேட்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரையை பயன்படுத்தி அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் NEMO நிறுவனம் தொடர்பாக தொடர்நடவடிக்கை எடுக்கப்படுவதாக | தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஐ) இளைஞர் படையணியின் தென் மாகாணத்தில் அமைந்துள்ள நிலையங்களில் நிர்மாண செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படும் 05 நிலையங்களில் சகல நிர்மாண வேலை களுக்காக கொடுப்பனவு செய்யும் போது தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு கோரப்பட்ட போதும் 2019 மார்ச் 15 ஆந் திகதி வரை அத்தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் தொகைக்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் தொடர்பான தகவல்கள் அந்நிறுவனத்தின் மூலம் கோரப்பட்ட போதும் இதுவரை தகவல்கள் இடம்பெறவில்லை யென | நிறுவனத்தினால் சரியான மற்றும் காலரீதியான தகவல்களை போதியளவில் பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) இந்நிர்மாணத்தை துரிதமாக நிறைவேற்றும் நோக்கில் திட்டமிடப்பட்டு நேரடியாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த போதும் தென் மாகாண சபைக்கு உரிய நிர்மாணம் 2019 சனவரி 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதிகளவிலான நிர்மாணங்களின் பௌதீக முன்னேற்றம் 35 இற்கும் 40 சதவீதத்திற்கும் இடைப்பட்ட மட்டத்தில் காணப்பட்டது. | NEMO நிறுவனம் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக | நிர்மாணத்தை விரைவில் நிர்மாணிப்பதற்காக தேவையான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **2.8.2** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் நிதிஏற்பாட்டின் பேரில் இளைஞர் படையணியின் நிலையக் கட்டிடங்கள் நிர்மாணத்தின் பரீட்சார்த்த செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட | | |

| | | | |
|---|---|---|---|
| | அட்டவணையின் பிரகாரம் ஒப்பந்தங்கள் 131 ஆக இருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | NEMO நிறுவனத்திற்கு 104 நிர்மாண ஒப்பந்தங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணத்திற்காக முற்பண பிணைமுறி பெற்றுக கொள்ளப்படாதிருந்ததுடன் அம்முற்பண மீதி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 115,905,951 ஆக இருந்தது. | 2008 சனவரி 11 ஆந் திகதிய 8/0173/344/ 002 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச நிர்மாண கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரச பொறியியலாளர் கூட்டுத்தாப னத்தினால் நிறைவேற்றப்படும் நிர்மாண வேலைகளுக்காக செயலாற்றல் மற்றும் பிணைப் பொறுப்பினை பெற்றுக் கொள்ளும் தேவைப்பாட்டி இருந்து விடுவிக்கப்பட்டிருந்த மையால் NEMO நிறுவனத்திடமிருந்து பிணைப் பொறுப்பு பெற்றுக் கொள்ளப் படவில்லை | அந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உப ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்காக இச் சலுகை உரித்தாவது இல்லை என்பதால் NEMO நிறுவனம் உப ஒப்பந்தம் வழங்கிய ஒப்பந்தக்காரரிடமிருந்து செயலாற்றல் பிணை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | கோமரன்கடவல இளைஞர் படையணி நிலைய நிர்மாணத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 19,527,110 தொகையான முற்பணத்திற்குரிய முற்பண பிணை முறி காலாவதியாகியிருந்தது. | தற்போது முற்பணம் தீர்வு செய்யப்பட்டுள்ளதால் முற்பண பிணை பொறுப்பினை நீடிக்கவில்லையென | முற்பண பிணை பொறுப்பினை முறையாக திகதி நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.9 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் படையணயின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 761 ஆக இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு படையணியின் அங்கீகரிக்கப்பட பதவியணியினர் 983 ஆக இருந்தது. உள்ளவாறான பதவியணியினர் 758 ஆக இருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடங்கள் 225 ஆக காணப்பட்ட போதும் வெற்றிடங்களாக காணப்பட்ட ஆங்கில மதியுரையாளர் மற்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக | வெற்றிடங்கள் காணப்படுவதால் படையணியின் செயலாற்றல் தொடர்பில் பாதகமாக தாக்கமளிப்பதால் துரிதமாக ஆட்சேர்ப்பு செய்வதற்கும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்தம் செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறான பதவியணியில் 164 மற்றும் ஒப்பந்த பதவியணியில் 61 வெற்றிடங்கள் உட்பட 225 வெற்றிடங்கள் காணப் பட்டதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி யின் 23 சதவீதமாகும். | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் படையணியின் பதவிவியணியின் பிரதான பதவியான ‘‘பணிப்பாளர்’’ பதவி நிரந்தர பதவியொன்றாக இருந்த போதிலும், நிரந்தர பதவியொன்றை வழங்காமல் தொடர்ச்சியாக இரண்டாம் நிலை அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2002 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணி அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் மூலம் படையணியின் பணிப்பாளராக அமைச்சரரால் தகுதியான பொருத்தமான நபரொருவர் நியமிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பணிப்பாளர் பதவிக்காக 03 சந்தர்ப்பங்களில் இரண்டாம் நிலை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தன. 2011 இன் ஆட்சேர்ப்பு நடைமுறையில் இப்பதவி குறிப்பிடப்பட்டிருந்த போதும் படையணி சட்டத்தை விஞ்சி செயற்பட்டிருந்தாக அவதானிக்கப்பட்டது. | குறித்த பதவிக்காக நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்தும் இயலுமை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது 70 நிரந்தர பதவியணியினரை உள்ளடக்கி நிறுவனத்தின் 130 ஊழியர்கள் சேவையைக் கைவிட்டுச் சென்றிருந்தனர். இவ்வாறு வேலையை கைவிட்டுச் செல்லும் போக்கு உயர்மட்டத்தில் காணப்பட்டமை, நிறுவனத்திற்கு பயிற்சி பெற்ற ஊழியத்தை இழந்தமையால் நிறுவனத்தின் வினைத்திறனுக்கும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | படையணிக்காக நிரந்தர அடிப்படை உட்பட ஒப்பந்த அடிப்படையிலும் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர். படையணியிலிருந்து பெற்றுக்கொள்ளும் நியமனம் ஓய்வூதி யத்திற்கு உரித்து இல்லாததாலும் நாடு பூராகவும் நிலையங்கள் அமைந்துள்ளமையாலும் அரசின் நிரந்தர ஓய்வூதியம் கிடைக்கும் தொழிலுக்காக செல்லும் போக்கு உருவாகியுள்ளதாகவும் | வேலையை கைவிட்டுச் செல்லும் போக்கினை குறைந்த மட்டத்தில் பேணுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.10 வாகன முறைமை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | படையணி 78 முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிளொன்று, 04 டபிள் கெப் வண்டிகள், 02 மோட்டார் வண்டிகள் மற்றும் லொறியொன்று உட்பட 86 வாகனங்கள் என்பவற்றை மீளாய்வாண்டில் பயன்படுத்தியிருந்தன. | 04 டபிள் கெப் வண்டிகள், 02 மோட்டார் வண்டிகள் லொறியொன்று ஒரு மோட்டார் சைக்கிள் என்பன படையணி யின் தலைமை யகத்திலிருந்தும் களஞ்சியததிலிருந்தும் பொருட்களை விநியோகிக்கும் கடமைகளுக்காகவும், 51 முச்சகர வண்டிகள் நிலையங்களின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 27 மோட்டார் வண்டிகள் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையங்களுக்கு வழங்குவதற்காக களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தற்போது 27 முச்சக்கர வண்டிகளில் 23 நிலையங்களுக்கும் 03 முச்சக்கர வண்டிகள் அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் சிறு வர்த்தக அபிவிருத்தி பிரிவிற்கும் எஞ்சிய முச்சக்கர வண்டி படையணியின் தலைமையகத்தின் வாகன குழாம் கடமைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் | வாகன முறைமையை செயற்திறனாக முகாமைத்துவம் செய்ய வேண்டும். |
| (ஆ) | ஏனைய நிறுவனங்களுக்குரிய 07 வாகனங்கள் படையணியால் பயன்படுத்தப்பட்டு வந்திருந்த போதும் இம்மோட்டார் வாகனங்களின் சட்டரீதியான உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 07 வாகனங்கள் ஏனைய அமைச்சுகளுக்கு உரித்தான போதும் 2015 ஆம் ஆண்டின் பின்னர் படையணி பல்வேறு அமைச்சுகளின் செயற்படுத்தப்பட்டதால் கையேற்பு நடவடிக்கைகள் முறையாக கையேற்று பூர்த்தி செய்ய முடியாமல் இருந்ததாக | வாகனங்களின் சட்டரீதியான உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 ஆம் ஆண்டு முதல் சட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 02 மோட்டார் வாகனங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனமொன்று கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்க்கப்பட வேண்டிய வாகனங்களை இணங்காணுதல், மதிப்பீடு செய்தல் போன்ற செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட போதும் வாகனங்களின் உரித்தினை கையேற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய அமைச்சிற்கு அனுப்பியுள்ளதாக | கைதவிர்ப்பு செயற்பாடுகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது 35 முச்சக்கர வண்டிகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் இருந்ததுடன் அம்முச்சகர வண்டிகளின் காப்புறுதிக்காக ரூபா 556,443 செலவிடப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டின் போது புதிய நிலையங்களுக்காக இம்முச்சக்கர வண்டிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததால் இந்த 35 முச்சரவ ண்டிகளுக்கு காப்புறுதி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் 2018 ஆம் ஆண்டில் 08 நிலையங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் 08 முச்சக்கர வண்டிகளன் வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் திறந்து வைப்பதற்கு நர்ணயிக்கப்பட்டிருந்த நிலையங்களின் நிர்மாண வேலைகள் மேற்கொள்வது மேலும் தாமதமடைந்ததால் எஞ்சிய 27 முச்சக்கர வண்கள் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | குறைந்த கிரயமொன்றின் கீழ் சொத்துக்களின் போதுமான காலரீதியில் பாதுகாப்பினை மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் 07 வாகனங்களுக்குரிய 08 வாகன விபத்துக்கள் இடம்பெற்றிருந்த போதும் வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அவ்வாறே வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 இன் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் கணக்குகள் இருபத்தி நான்கு மாதங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டின் கணக்குகள் இருபத்தியொரு மாதங்கள் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் கணக்குகள் 2020 யூன் 20 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்வப்போது அரசியல் மாற்றங்களுடன் சபையில் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் கணக்குகளை அங்கீகரிக்க முடியாமல் இருந்ததால் அந்தந்த ஆண்டுகளின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்குகள் சமர்ப்பித்தல் தாமதமடைந்துள்ளதாகவும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.2 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 இன் பிரகாரம் படையணியினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் முறையான திட்டமொன்று இல்லாமல் இருந்ததாகவும் கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரிப்பதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3.3 உள்ளக கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது உள்ளக கணக்காய்வினால் நிறுவகத்தின் உள்ள கட்டுப்பாட்டு நடைமுறைகள் பரீட்சிக்கப்பட்டு 83 கணக்காய்வு அறிக்கைகள் முகாமைக்கு அறிக்கையிட்டிருந்ததுடன் அவ்வறிக்கைக்காக பதில் வழங்குவதில் தாமதம் அவதானிக்கப்பட்டது. அதாவது 05 அறிக்கைளுக்கான பதிலை வழங்குவதற்கு ஓராண்டிற்கு மேற்பட்ட காலமும் 21 அறிக்கைகளுக்காக 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமும் 16 அறிக்கைகளுக்காக 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலமும் எடுக்கப்பட்டிருந்தது. | படையணியின் 2018 ஆம் ஆண்டிற்குரியதாக வழங்கப்பட்டிருந்த உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்காக பதில் இதுவரை தீர்வு செய்யப்படவில்லை எனவும் விசேட பரிசோதனை மட்டத்தில் உள்ள 03 விசாரணைகள் தீர்வு செய்யப்பட்டு வருவதாகவும் | உள்ளக கணக்காய்வு ஐய வினாக்கள் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சீராக்குவதற்கு கவனம் செலுத்தி தாமதமின்றி பதில் வழங்க நடவடிக்கை எடுத்தல் |

**3.4 கணக்காய்வுக் குழு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றதுன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழு நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | சபையின் உள்ளடக்கம் வேறுபட்டமை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உள்ளடக்கமும் மாற்றப்பட்டதன் காரணமாக குழுவொன்று சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நியமிக்க முடியாமல் இருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |